மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தேர்தல் சின்னங்களை ஒதுக்குவதற்காக இந்தியாவின் தேர்தல் கமிஷன் கீழ்க் கண்ட கட்சிகளை அகில இந்திய கட்சிகளாக அங்கீகரித்துள்ளது.

இந்திய தேசிய காங்கிரஸ், சுதந்திரா கட்சி, பாரதிய ஜனசங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சமயுக்த சோஷலிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்), பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. என். எஸ்: வி. சித்தன்: இந்தக் கட்சிகள் எல்லாம் கடந்த பொதுத் தேர்தலில் எத்தனை சதவிகிதம் வாக்குகள் பெற்றிருக்கின்றன என்று கூற முடியுமா? மேலும் தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவா? இந்தக் கட்சிகளுக்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கட்சிகளின் உறுப்பினர் கள் பற்றி அந்தந்தக் கட்சித் தலைவர்களைத்தான் கேட்க வேண்டும். இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், கடந்த பொதுத் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வாக்குகளைப் பெற்ற தனால் தான் அங்கீகரிக்கப்பட்டன. அந்தவகையில் இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விடையளிக்கும்போது, இந்திய தேசிய காங்கிரஸ் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கட்சி இப்போது எங்கே இருக்கிறது? இப்போது சிண்டிகேட், இண்டிகேட் என்று சொல்லிக் கொள்கிறார் களே, அப்படியானால் இந்தக் கட்சி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, அந்தக் கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். இதை நான் ஆட்சேபிக் கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சுருக்கமான பதில்—நீதிமன்றத்தில் இருக்கிறது.

தேர்தல் துறை

* 235 வினா.—திரு. என். எஸ்: வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இம்மாநிலத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் நேரடி மேற் பார்வையின் கீழ் தேர்தல் துறை எதுவும் அமைக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு அரசிடம் இது போன்ற செயற்குறிப்பு இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

1970 செப்டம்பர் 5]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே தேர்தல் ஆணைக்குழுவின் நேரடிப் பார்வையின்கீழ் தேர்தல் துறை இருக்குமானால் மாநில அரசாங்கமே நல்ல முறையில் நடத்திக் கொள்ளலாம். இது வரையில் இல்லை என்றால், இனி மேலாவது ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதற்காகத் தான் மாநில சுய ஆட்சி கேட்கிறோம்.

DR. H. V. HANDE : Is it not a fact that a few months ago in a hurry because there was the threat of mid-term poll, a number of officers were suddenly appointed and they took the census and they are now the final census. Because it was done in a hurry number of complaints have been received. The State Government has also responsibility in the matter and there is a Deputy Secretary (Election). A number of officers were appointed because there was threat of mid-term poll and census was taken in a hurry. In view of the joint responsibility of State Government and Central Government on this issue, will the Hon. Chief Minister state whether any complaints were received because of what I have stated and will the Hon. Chief Minister give us an assurance that those complaints will be considered and examined?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் வந்ததற்குத் தகவல் இல்லை. அப்படி வருமேயானால் கவனிக்கப்படும்.

தனி நபர்கள் வருவாய்க்கு உச்ச வரம்பு.

*** 190** வினா:—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர் ஆண்டு வருவாய்க்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தனி நபர் ஆண்டு வருமானத்துக்கு உச்ச வரம்பு வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள்

'Taxes on income and plantation agricultural income' இதைத் தவிர, விவசாய வருமானத்தைத் தவிர மற்ற வருமானங்களின் மீது வரி விதிக்கிற உரிமை அரசியல் சட்டத்தில் 7-வது ஷெடியூல் 82-வது என்ட்ரியிலே போட்டு மத்திய அரசைச் சார்ந்து இருக்கிறது. அந்த அதிகார வரம்பு நம்மிடத்தில் இல்லாததால் அதைப்பற்றி நாம் பரிசீலனை செய்ய முடியாமல் இருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதற்குக் காரணம் வருமான வித்தியாசம் தான். அந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு வருமானத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வர அரசு முயற்சி எடுக்குமா ? குறைந்த பட்சம் மாத சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற அலுவலர்கள் இடையே